சுருக்கம்

குடியரசு நாள் விழா – 26.01.2015 அன்று சென்னையில் நடைபெறவுள்ள குடியரசு நாள் விழா கொண்டாட்டங்கள்–அரசுத்துறை அலங்கார ஊர்திகள் பங்கேற்பு மற்றும் கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு– பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை, பங்கேற்றல்–செலவினம்–ஒப்பளிப்பு செய்தல்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (ஏடி–1) துறை**

அரசாணை (பத்தாண்டு) எண்.93

நாள்: 23.01.2015
திருவள்ளுவர் ஆண்டு 2046

ஜெய வருடம், தை மாதம் – 09

படிக்கப்பட்டது:

அரசாணை (நிலை) எண்.14, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (பொருட்காட்சி)த் துறை, நாள் 12.1.2015.

---

**ஆணை:**

ஆண்டுதோறும் சென்னையில் நடைபெறும் குடியரசு நாள் விழா கொண்டாட்டத்தில் அரசின் குறிக்கோள்கள், நல்வாழ்வு திட்டங்கள் மற்றும் சாதனைகளை விளக்கும் அலங்கார ஊர்தி அணிவகுப்பு மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடத்த அரசின் சார்பில் ஏற்பாடுகள் செய்யப்படுகிறது. வரும் குடியரசு நாள் விழா, 26.01.2015 அன்று அரசின் சார்பில் மிகச் சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது. 26.01.2015 அன்று சென்னையில் நடைபெறவிருக்கும் குடியரசு நாள் விழா அலங்கார ஊர்தி அணிவகுப்பில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, சென்னை 9ன் கீழ் இயங்கும் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை, சென்னை 6ன் சார்பாக ஒரு அலங்கார ஊர்தி பங்கேற்க அனுமதியும், அதற்காக மக்கள் நல்வாழ்வு (மற்றும்) குடும்ப நலத் துறைக்கு ரூ. 96,690/–க்கு (ரூபாய் தொண்ணூற்று ஆறாயிரத்து அறுநூற்று தொண்ணூறு மட்டும்) செலவினம் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்தும் மேலே படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. அரசு இதனை கவனமாக ஆராய்ந்து பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறைக்கு ரூ. 96,690/–க்கு (ரூபாய் தொண்ணூற்று ஆறாயிரத்து அறுநூற்று தொண்ணூறு மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. தமிழ் நாடு நிதி விதித்தொகுப்பு தொகுதி – I, பிரிவுக்கூறு 99ன் படி மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்ட, தொகையினை மேற்குறிப்பிட்ட துறையின் இயக்குநர் பணமாக கருவூலகத்திலிருந்து பெறுவதற்கும் அதனை உரிய விரிவான பட்டியல் மற்றும் செலவு சீட்டுகளை சமர்ப்பித்து அதனை தீர்வு செய்வதற்கும் அரசு அனுமதி வழங்குகிறது.

3. இச்செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்.

"2210 மருத்துவமும் பொது சுகாதாரமும் 06 – பொது சுகாதாரம் – 113 – பொது சுகாதார விளம்பரம் I திட்டத்தில் சேராதது AE – பொருட்காட்சி – மக்கள் தொடர்பு சாதன பிரிவுகள் 08 விளம்பரமும் பிரச்சாரமும் – 02 பொருட்காட்சி'' –
(து. தொ.கு எண் 2210–06–113–AE-0821)

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்
அரசு செயலாளர்

பெறுநர்,
இயக்குநர்,
பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை, சென்னை – 6
மாநில கணக்காய்வுத்தலைவர், சென்னை – 18/35
சம்பளம் (மற்றும்) கணக்கு அலுவலர், சென்னை – 35
நகல் :
தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தி (பொருட்காட்சி)த் துறை. சென்னை – 9)
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல (டேட்டா செல்) த்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / சுத்த நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

23/1/15